கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட

பெண் இன்ஸ்பெக்டர் மீது சிபிசிஐடியில் மேலும் ஒரு வழக்கு

ஸ்ரீவில்லிபுத்தூர், மே. 31: கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட பெண் இன்ஸ்பெக்டர் மீது சிபிசிஐடியில் மேலும் ஒரு வழக்கு இருப்பது தற்போது விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் இந்திரா நகரைச் சேர்ந்தவர் ராமர். இவருக்கும் அதே ஊரைச் சேர்ந்த ராமசாமி என்பவருக்கும் கோயிலில் சிங்கம் சிலை வைப்பது தொடர்பாக பிரச்னை ஏற்பட்டது. அதில் ராமசாமி, அவரது மகன்கள் ராஜேந்திரன், ராம்குமார் மற்றும் பெண் இன்ஸ்பெக்டர் சத்திய ஷீலா ஆகியோருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அதில் ராமரை தாக்கியதில், தலையில் பலத்த காயம் அடைந்தவர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து ராமசாமி, அவரது மகன் ராஜேந்திரன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். ராம்குமார், சத்திய ஷீலா ஆகியோர் தலைமறைவாகிவிட்டனர். அவர்களை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். பின்னர் அவர்கள் பெங்களூரில் பதுங்கியிருப்பது தெரிந்து கைது செய்யப்பட்டனர். அவர்கள் தீவிர விசாரணைக்குப் பிறகு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

சத்திய ஷீலா

விசாரணையில் திடுக் தகவல்கள் அம்பலம்

இந்தநிலையில், சத்திய ஷீலா மீது ஏராளமான புகார்கள் வந்ததால், ராமநாதபுரம் மாவட்ட டிஐஜி துரை விசாரணை நடத்தி, சத்திய ஷீலாவை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டார். மேலும் பெண் இன்ஸ்பெக்டர் குறித்து விசாரணை நடத்தியபோது திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. ராம்குமாருக்கும், சத்திய ஷீலாவுக்கும் இடையே டிக் டாக் மூலம்தான் பழக்கம் ஏற்பட்டது. பெண் இன்ஸ்பெக்டருடன் பழகிக் கொண்டிருந்தபோதே, பெண் டிஎஸ்பி ஒருவருக்கும் ராம்குமாருக்கும் பழக்கம் ஏற்பட்டது. நீண்ட நாட்களுக்குப் பிறகு ராம்குமார், பெண் இன்ஸ்பெக்டர் சத்திய ஷீலாவுடன் வசிப்பது தெரிந்ததும், பெண் டிஎஸ்பி தனது காவலர்களை அனுப்பி இருவரையும் போலீஸ் வண்டியிலேயே தூக்கிவரும்படி உத்தரவிட்டார்.

இரு நாட்கள் விசாரணைக்குப் பிறகு ராம்குமாரின் செல்போனை மட்டும் பிடுங்கிக் கொண்டு அனுப்பி வைத்தார். அதன் பின்னர் இன்ஸ்பெக்டருடன் ராம்குமார் வசித்து வந்தார். அவர் சரியாக வேலைக்குச் செல்லாமல், ராம்குமாருடன் சேர்ந்து வட்டி தொழில் நடத்தி வந்தார். இதனால் அவர் மண்டபம் அகதிகள் முகாமுக்கான காவல்நிலைய இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டார். தற்போது அவர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டார்.

நாச்சியப்பன்

அதேநேரத்தில் சில மாதங்களுக்கு முன்னர் சிவகங்கையில் அனைத்து மகளிர் காவல்நிலைய இன்ஸ்பெக்டராக பணியாற்றியபோது, 20க்கும் மேற்பட்ட இடங்களில் பேக்கரி நடத்தி வந்த நாச்சியப்பன் என்பவரை அழைத்து வந்து போக்சோ வழக்கு பதிவு செய்து கைது செய்தார். இது பொய் வழக்கு என்று கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த நாச்சியப்பன், தற்கொலை செய்து கொண்டார். அவரது உறவினர்கள் மறியல் போராட்டம் நடத்தியதால், அவர் தற்கொலை வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது.

விசாரணையில் அவர் மீது போடப்பட்டது பொய் வழக்கு என்று தெரிந்தது. அந்த வழக்கில் சத்திய ஷீலா மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது தற்போது தெரியவந்துள்ளது. இதனால் சத்திய ஷீலா மீது மேலும் பல புகார்கள் உள்ளதா என்று தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவரது கணவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் மர்மமான முறையில் இறந்துள்ளார். அதன்பின்னர் 2 ஆண் நண்பர்கள் இருந்துள்ளனர். தற்போது ராம்குமாரை திருமணம் செய்யாமல் ஒன்றாக வசித்து வருவதாக கூறப்படுகிறது. இதனால் சத்திய ஷீலா மீது நிர்வாக ரீதியிலான விசாரணை நடத்த அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

உல்லாச வீடியோ வெளியிடுவதாக கூறி

அதிமுக பிரமுகரிடம் ₹1 கோடி கேட்டு மிரட்டல்

அரியலூர், மே 31: பெண்ணுடன் உல்லாசமாக இருந்த வீடியோவை வெளியிடுவதாக கூறி அரியலூர் அதிமுக பிரமுகரிடம் ₹1கோடி கேட்டு மிரட்டிய 3 பேரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.

அரியலூர் கிருஷ்ணன் கோவில் தெருவை சேர்ந்தவர் தாய்ராஜா (40). அதிமுக முன்னாள் நகர இணை செயலாளரான இவர், ஓட்டல் மற்றும் ரியல் எஸ்டேட், பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். இந்நிலையில் இவரது செல்போன் பழுதடைந்ததால் சரி செய்வதற்காக சில தினங்களுக்கு முன் அரியலூர் பகுதியில் உள்ள ஒரு தனியார் செல்போன் கடையில் கொடுத்து சரி செய்து வாங்கியுள்ளார்.

3 பேர் கைது

இதில் செல்போனை பழுது பார்க்கும் போது, அதில் தாய்ராஜா ஒரு பெண்ணுடன் உல்லாசமாக இருந்த வீடியோ பதிவு இருந்ததை கடை உரிமையாளர் பார்த்துள்ளார். பின்னர் அவர், தனது நண்பர்களான சிவபாரதி (26), ராஜாஜிநகரை சேர்ந்த சரவணகுமார் (23), காமராஜ்நகரை சேர்ந்த வெங்கடேஷ் (32) ஆகிய மூன்று பேரின் செல்போனுக்கு அனுப்பியுள்ளார். இவர்கள் மூன்று பேரும் இந்த வீடியோ பதிவை பார்த்து விட்டு தாய்ராஜாவை தொடர்பு கொண்டு, உங்களது ஆபாச படங்கள் அனைத்தும் எங்களிடம் உள்ளது. அதனை தர வேண்டும் என்றால் ₹1கோடி கொடுக்க வேண்டும். தரவில்லை என்றால், அதனை வாட்ஸ்அப், பேஸ்புக்கில் வெளியிடுவோம் என்று மிரட்டியுள்ளனர். இதனை கேட்டு அதிர்ச்சியடைந்த தாய்ராஜா, சைபர் கிரைம் போலீசில் புகார் கொடுத்தார். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிந்து தாய்ராஜாவை மிரட்டி பணம் கேட்ட 3 பேரையும் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

ஊட்டி மலை ரயில் மோதி ஒருவர் சாவு

ஊட்டி, மே 31: ஊட்டி ரயில் நிலையத்திலிருந்து மலை ரயில் மேட்டுப்பாளையத்துக்கு நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு புறப்பட்டது. 2 கிலோ மீட்டர் தூரம் பயணித்து மரபியல் பூங்கா அருகே ரயில் சென்றபோது திடீரென தண்டவாளத்தை கடந்த ஒருவர் மீது மோதியது. இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார். இறந்தவருக்கு சுமார் 45 வயது இருக்கும். அவர் யார்?, எந்த ஊரை சேர்ந்தவர்? என்பது குறித்து ஊட்டி ரயில்வே போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர். விபத்தின் காரணமாக ஊட்டி மலை ரயில் சுமார் ஒரு மணி நேரம் தாமதமாக மேட்டுப்பாளையம் புறப்பட்டு சென்றது.

திருப்பூர் மண்டல போக்குவரத்து பொது மேலாளர் சஸ்பெண்ட்

திருப்பூர், மே 31: தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் திருப்பூர் மண்டல பொது மேலாளராக மாரியப்பன் பணியாற்றி வந்தார். இவர் இன்றுடன் பணி ஓய்வு பெற இருந்தார்.

இந்த நிலையில் மாரியப்பன் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். ஓட்டுநர், நடத்துநர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்ததில் பாரபட்சம் காட்டியது உள்ளிட்ட குற்றச்சாட்டால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை - 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை-600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) கீழ் உடன் விதி 9(1) படிக்கவும்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் மின் -ஏல விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எல்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 19–06–2024 நாளில் விற்பனை செய்யப்ப உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்திவைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 19–06–2024 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்திலோ பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 18–06–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட சுருக்கமான விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
1.	TCHIN040400010012 6410 & TCHH 040400010012 6043	திரு. ரிச்சர்டு ராஜதுரை கிருஷ்ணன் திருமதி. செல்வி R	கடன் கணக்கு எண். TCHHL040400010012 6043 இன் கீழ் உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 19,69,127/– மற்றும் கடன் கணக்கு எண். TCHIN040400010012 6410 இன் கீழ் உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.96,656/– மொத்தம் ரூ. 20,65,783/– & 23.08.2023	Rs. 19,00,000/- (ரூபாய் பத்தொன்பது லட்சம் மட்டும்)	Rs. 1,90,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்)	கையக

அசையா சொத்தின் விவரங்கள்: ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, எண்.43, வடமங்கலம் கிராமம், மாவட்டத்தில் அமைந்துள்ள சர்வே எண். 223/1 & 223/2, மனை எண்.7, DTCP அனுமதி எண்.280/2006 இன்படி அமைந்துள்ள ஸ்ரீ சீனிவாசா V நகர், காஞ்சிபுரத்தில் 1906 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள மனை எண்.7 இன் அனைத்து துண்டு மற்றும் பகுதி அடங்கிய நிலம் உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கு: மனை எண்.6, தெற்கு: காலி நிலம், கிழக்கு: காலி நிலம், மேற்கு: 30 அடி லே அவுட் சாலை. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் – 60 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 60.1 அடி, வடக்கு தெற்காக கிழக்குப் பக்கம் 33.6 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 30 அடி. மொத்தம் 1906 ச.அடி பகுதி, சங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

2.	TCHH 04 04000100 070915	ரேவதி P திருமதி. கன்னியம்மாள் P	ரூ.41,38,719/– (ரூபாய் நாற்பத்தொரு இலட்சத்து முப்பத்தெட்டு ஆயிரத்து எழுநூற்று பத்தொன்பது மட்டும்) & 17.05.2022	Rs. 28,00,000/- (ரூபாய் இருபத்தெட்டு லட்சம் மட்டும்)	Rs. 2,80,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)	கையக

அசையா சொத்தின் விவரங்கள்: அட்டவணை A: செங்குன்றம் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், மொத்தம் உள்ள 1,16,412 ச.அடி அல்லது 2 ஏக்கர்கள் 67 சென்ட்கள் உள்ள நிலத்தில் திறந்தவெளி பதிவு நிலமாக மறைமலைநகர் நகராட்சிக்கு வழங்கப்பட்ட 11,679 ச.அடி நிலம் போக, மீதமுள்ள 1,04,733 ச.அடி நிலத்தில் அங்கீகார எண்.80சி/2021, பரப்பளவு 897 ச.அடி உள்ள பிளாட் எண்.A–409, நான்காவது தளம், பிளாக் A –இல் கீழ்புறத்தில் உள்ள கார் நிறுத்துமிடம் உள்பட பிரிக்கப்படாத 425.36 ச.மீட்டர் பங்கு உள்ள சொத்தின் சர்வே எண்கள்: 191/3B & 191/4, பட்டா எண். 2609 (பட்டாவின்படி, சர்வே எண்: 191/3B1 & 191/4A) ஆகும். அதில் அடங்கிய அனைத்துத் துண்டுகளும் பகுதிகளும் அடங்கியுள்ள காலி நிலம் உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கு: சர்வே எண்.230 இல் உள்ள காலி நிலம், தெற்கு: செங்குன்றம் சாலை, கிழக்கு: சர்வே எண். 191/4B, 3B3 மற்றும் 2A2A1 இல் உள்ள சொத்து. மேற்கு: மறைமலை நகர் நகராட்சிக்கு வழங்கப்பட்ட திறந்தவெளி பதிவு நிலம். செங்கல்பட்டு பதிவு மாவட்டம், செங்கல்பட்டு இணை II சார் பதிவு மாவட்டத்தில் அடங்கியுள்ள சொத்து. அட்டவணை B: (இங்குள்ள சொத்து விற்பவரிடம் இருந்து வாங்குபவருக்கு அளிக்கப்பட்டது) அட்டவணை– A இல் உள்ள 425.36 ச.அடி பரப்பளவு உள்ள பிரிக்கப்படாத பங்கு மற்றும் பயன்கள் உள்ள நிலம்.
குறிப்பு: சென்னை உயர்நீதிமன்றத்தில் TCHFL–க்கு எதிராக கடன்தாரரால் தாக்கல் செய்யப்பட்ட (F1.No.2/2023–Bin I.P.No.8/2022) மனு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் TCHFL–க்கு எதிராக எந்த தடையுத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

3.	TCHH 04040 00100073924 & TCHIN040400 0100074601 & TCHIN040400 0100104380 & TCHIN040400 0100188217	திரு. மகேஷ் R திருமதி. பூஜா M	கடன் கணக்கு எண்.TCHHL04040000100073924 இன்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.22,56,014/– மற்றும் கடன் கணக்கு எண்.TCHIN04040000100074601 இன்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.68,975/– மற்றும் கடன் கணக்கு எண். TCHIN04040000100104380 இன்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.4,58,913/– மற்றும் கடன் கணக்கு எண்.TCHIN04040000100188217 இன்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.5,16,602. மொத்தம் ரூ.33,00,504/–& 21–09–2023	Rs. 31,60,000/- (ரூபாய் முப்பத்தொரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்)	Rs. 3,16,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து பதினாறு ஆயிரம் மட்டும்)	கையக

அசையாச் சொத்துகள் விவரம்: அட்டவணை A: காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார் பதிவு மாவட்டம், ஆயத்தூர் கிராமம், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம் சர்வே எண்கள்: 297, 293/3, 293/4 பட்டா எண்.656 இன்படி புதிய சர்வே எண்: 293/7& 297/3, மனை எண்.28–B, பவானி நகர் லேஅவுட்டில் (லேஅவுட் அனுமதி எண்.DTCP No.471/92 இன்படி) உள்ள 900 ச.அடி பரப்பளவு உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள அனைத்து துண்டுகளும் பகுதிகளும் உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கில்: மனை எண்.7, தெற்கில்: 30 அடி அகல சாலை, கிழக்கில்: ஏ.ரேணுகாதேவிக்குச் சொந்தமான மனை எண்.28–A மேற்கில்: மனை எண்.29. அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 18 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 18 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம்: 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம்: 50 அடி. மொத்த பரப்பளவு 900 ச.அடி.
அட்டவணை–B, தரைத்தளம் 752 ச.அடி கட்டுமான பகுதியுடன் கூட இதர 100 ச.அடி கழிவுத்தொட்டி, மாடிப்படி, மின் சேவை, முன் உயர்நிலை வேலைகள், சுற்றுச்சுவர்.

4.	TCHH 04900 00100066361 & TCHIN049000 0100066427	ரேவதி B, M/S ப்ரதிஜிக் வியர், திரு. பாலாஜி M	கடன் கணக்கு எண்.TCHIN0490000100066427, இன் கீழ் உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 44,956/– (ரூபாய் நாற்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறு மட்டும்) மற்றும் கடன் கணக்கு எண். TCH–HL0490000100066361 இன் கீழ் உங்களால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.29,69,284/– (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து இருநூற்று எண்பத்து நான்கு மட்டும்)மொத்தம் ரூ. 30,14,240/–(ரூபாய் முப்பது இலட்சத்து பதினான்காயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) & 19.12.2023	Rs. 46,00,000/- (ரூபாய் நாற்பத்து ஆறு இலட்சத்து மட்டும்)	Rs. 4,60,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்)	கையக

அசையாச் சொத்துகள் விவரம்: செங்கல்பட்டு பதிவு மாவட்டம், சங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், எண்.152, வட்டம்பாக்கம் கிராமத்தில் (D.T.C.P. vide LP/DTCP எண்.256/2019, தேதி:30.05.2019) பட்டா எண்.1259, சர்வே எண். 93/33 உள்ள ஒளம்எஸ் கிரீன் சிட்டி எனப் பெயரிடப்பட்ட லே அவுட்டில் 1602 ச.அடி பரப்பளவு கொண்ட மனை எண்.16 மற்றும் 1602 ச.அடி பரப்பளவு உள்ள மனை எண்.17 என மொத்த பரப்பான 3204 ச.அடி உள்ள அனைத்து துண்டுகளும் பகுதிகளும் காலி வீட்டு மனை உள்ளடங்கிய சொத்து. மனை எண்.16 இன் எல்லைகள்: வடக்கில்: 23 அடி சாலை, தெற்கில்: சர்வே எண் 93/34 கொண்ட காலி நிலம், கிழக்கில்: மனை எண்.15, மேற்கில்: மனை எண்.17, அளவீடு: வடக்கு பக்கம்: 36 அடி, தெற்கு பக்கம்: 36 அடி, கிழக்கு பக்கம்: 44.6 அடி, மேற்கு பக்கம்: 44.6 அடி என மொத்த பரப்பின் அளவு 1602 ச.அடி. மனை எண்.17 இன் எல்லைகள்: வடக்கில்:23 அடி சாலை, தெற்கில்:சர்வே எண். 93/34 கொண்ட காலி நிலம், கிழக்கில்:மனை எண்.16, மேற்கில்:மனை எண்.18, அளவீடு: வடக்கு பக்கம் 36 அடி, தெற்கு பக்கம் 36 அடி, கிழக்கு பக்கம் 44.6 அடி. மேற்கு பக்கம் 44.6 அடி என 1602 ச.அடி பரப்பு. மனை எண்கள்.16 மற்றும் 17 (1602 + 1602) ஆகியவற்றின் மொத்த பரப்பான 3204 ச.அடியானது சங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டத்தில் காஞ்சிபுரம் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனியிப்பட்ட முறையில் தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர்(கள்) ஆகியோருக்கு இந்த அறிவிப்பு பிரகாரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.
இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்கும்விதமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.
விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது ஆகும்:
குறிப்பு: மின்–ஏலம் ஆனது https://bankauctions.in/ என்ற இணைய முகப்பு மூலம் 19.06.2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 10 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.
விதிமுறைகள் மற்றும் நிபந்தனை: 1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்ப உரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். 2. நிர்ணய விலைக்கு குறைவாக அசையாச் சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது. 3. ஏலம் உயர்த்தும் தொகை: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4. சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் TATA CAPITAL HOUSING FINANCE LTD பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத் தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகை செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5. உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வ தகுதியடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்கு குறைவில்லாதது என்பதை பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாக காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். 6. பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனையை ஒத்திவைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். 7. மூன் அனுமதியின் பேரில் 11.06.2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிட லாம். 8. வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்கு பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ஏலப்புள்ளி தொகையின் இருபத்தைந்து சதவீதத்தை செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், ஏலமிப்பட்ட சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். 9. மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகை செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக செலுத்த வேண்டும். 15வது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15 ஆவது நாளுக்கு பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 10. மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடா செய்ய தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் மூலம் கைக்கொள்ளப்படும். ஏற்கெனவே ஏலம் எடுத்தவர் சம்பந்தபட்ட நிலம்/ தொகை தொடர்பாக எந்த உரிமையையும் கோர முடியாது. 11. மேற்கூறப்பட்டசொத்து தொடர்பான டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்குத் தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள் பற்றியும், மேலும் அந்த சொத்து தொடர்பான சொத்தின் தன்மை மற்றும் மதிப்பு குறித்த பிற விவரங்கள் மற்றும் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து ஏலம் எடுக்கத் திட்டமிடும் ஏலதாரர்கள் தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். 12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள் சேவை வழங்குநர், 4 குளோசர், பிளாக் எண்.605ஏ, 6ஆவது தளம், மைத்திரிவனம் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ், அமீர்பேட், ஹைதராபாத்–500038 இன் ஒருங்கிணைப்பாளர்கள் திரு.அரிஜித்குமார் தாஸ், கைபேசி எண் 8142000725, 8142000066 8142000062 மின்னஞ்சல் முகவரி: arijit@bankauctions.in மற்றும் மின்னஞ்சல்:info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம